# பதுளை மாநகர சபை

## பதுளை மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 08 ஆம் திகதி வரை கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாட்டு மற்றும் செயலாற்றுகை தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை

**பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 11 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அத்தகைய ஐயவினாக்களுக்குட்பட்டிருந்த கணக்கிடக்கூடிய கொடுக்கல்வாங்களின் பெறுமதி ரூபா 21,585,329 ஆக இருந்தது.

#### 1.2.2 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்று டனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 267 – 272 ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபையினால் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 இலக்க தேசிய சுற்றறாடல் சட்டத்தால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வனவள அபிவிருத்தி அமைச்சரால் 2000 நவம்பர் 22 ஆம் திகதிய பிரசுரிக்கப்பட்ட 1159/22 இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரம் | சபையின் மாடுகள் அறுக்குமிடத்திற்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றிருக்கவில்லை. |
| (இ) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் (நி.பி) | |
| (i) நி.பி 189 | 1999 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை ரூபா 1,153,434 பெறுமதியான 89 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | 1998 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை 51 சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு கருமங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,821,811 ஆன முற்பணம் 2010 இன் இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 395(ஈ) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தினதும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றையும் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் இறுதியாக 2010 செப்தம்பர் மாதம் வரையிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (iv) நி.பி 396 | விநியோகிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 52,277 பெறுமதியான 25 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி 570 மற்றும் 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,005,986 தொகையான மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vi) நி.பி 763 | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் களஞ்சிய சட்டவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vii) நி.பி 1645(அ),(இ) மற்றும் 1646 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்காக முறையாக சம்பவப் பதிவேடுகளை பராமரிக்கப்படா திருந்ததுடன், சில வாகங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் மற்றும் பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் மூலப் பிரதிகளும் கணக்காய்வு தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) நி.பி 1647(ஆ),(உ) | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் கணிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வாகனங்கள் தொடர்பாக விபரங்கள் உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டி ருக்கவில்லை. |

(ஈ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

| | |
|---|---|
| (i) xix ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 4:3:4 உப பிரிவு | நகர சபையின் வீடுகளை பெறுவதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு அதன்பிரகாரம் காத்திருக்கும் பதிவேடொன்றை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) xix ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | வீடுகளுக்காக சிக்கன வாடகையை அறவிடும் போது பிரதான மதிப்பீட்டாளர் ஊடாக மதிப்பீடு செய்து அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 48,581 | 19,455 | 29,126 | 63,264 | 12,329 | 50,935 |
| வாடகை | 9,931 | 7,019 | 364 | 6,202 | 3,071 | 3,131 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,282 | 3,146 | 2,703 | 5,126 | 3,124 | 2,002 |
| ஏனைய வருமானம் | 267 | 892 | 1,638 | 5,748 | 4,223 | 1,725 |

### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள தண்டப்பணத் தொகை ரூபா 832,592 சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது..

### 2.1.3 முத்திரைக் கட்டணம்

2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 5,089,826 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.1.4 வீதவரிகள்

சபையினால் கட்டிட விண்ணப்பங்களை அனுமதிக்கப்பட்டிருந்த 1488 விண்ணப்பங்கள் தொடர்பாக ஆராய்ந்து இணக்கச்சான்றிதழ்களை வழங்கி வீதவரி பெறுமதிகளை திருத்தி வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.5 களியாட்டவரி

1998 முதல் 2005 வரையான காலப்பகுதிக்குரிய சினிமா கொட்டகையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,632,128 மற்றும் இன்னொரு சினிமா கொட்டகையிலிருந்து 2003 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,812,841 தொகையான களியாட்ட வரியையும் 1999 ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 73,500 தொகையான விளம்பர அறவீட்டுக் கட்டணத்தையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.2 மிகை அறவீடுகள்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரத்தின்) 226(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 3,540,000 ஆக இருந்தது.

## 2.3 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்றுத் தரங்கள் | 06 | 04 |
| மூன்றாம் தரத்தினர் | 39 | 31 |
| இரண்டாம் தரத்தினர் | 49 | 56 |
| ஆரம்ப தரத்தினர் | 272 | 205 |
| வேறு (அமைய /தற்காலிக) | இல்லை | 88 |

## 2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.4.1 பயன்படுத்தாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

மெசிபேர்கியுசன் வகையிலான இரண்டு உழவுஇயந்திரங்களும் குபோட்டா வகையிலான இரண்டு கை உழவுஇயந்திரங்களும் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.4.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,320,225 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,969,308 ஆக இருந்தது.

### 2.4.3 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

மீளாய்வாண்டில் பொருட்கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.5 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

(அ) 2010 ஆம் ஆண்டின் வாரச்சந்தையின் சந்தை வரி அறவீடுகளின் உரிமையை கேள்வி ஊடாக குத்தகைக்கு பெற்றுக்கொண்ட நபரினால் சந்தை வரியை அறவிடும் போது ஏற்பட்ட சிக்கல் நிலைமையை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்காமல் சபையின் வருமானப் பரிசோதகரினை ஈடுபடுத்தி சந்தை வரியை சேகரித்தமையால் சபைக்கு ரூபா 1,265,804 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) நிர்ணயித்த படி பட்டியல் செலுத்தப்படாமையால் துண்டிக்கப்பட்ட நீர் இணைப்பினை மீளப்பெற்றுக்கொள்வதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 13,440 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையின் ஊழியர் ஒருவருக்காக 1991 முதல் 1995 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு தாமதமாகியதன் காரணமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 9,052 மிகை கொடுப்பனவாக செலுத்த வேண்டியேற்பட்டது.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வருவம் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஒழுக்காற்று பரிசோதனை நடவடிக்கையை பூர்த்தி செய்யாமையால் கடமை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு 03 ஆண்டுகள் 02 மாதங்கள் 10 நாட்களுக்காக சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவாக ரூபா 1,118,759 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், சபையினால் பராமரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் விபரங்கள் மற்றும் தற்போது இலங்கை மின்சார சபையால் செலுத்தப்படும் வீதிவிளக்குகளின் பராமரிப்பிற்காக செலுத்தப்படும் கட்டணத்தின் பிரகாரம், அண்ணளவாக சபையினால் வருடாந்தம் ரூபா 628,572 அளவில் இழக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் அதிகார பிரதேசத்தினுள் அனுமதியற்ற கேபல் தொலைக்காட்சி சேவையை முறைப்படுத்துவதற்காக தேவையான உபவிதிகளை உருவாக்கவோ வேறு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 23 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,168,119 பெறுமதியான பொருட்களை இருப்புப் பதிவேடுகளுக்கோ அல்லது பின்காட்களுக்கோ உள்ளடக்காமல் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.7 செயலாற்றுகை

சபையின் கணக்குப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாமையினால், சபையின் செயலாற்றுகை இலக்கிடப்பட்ட நோக்கங்களை எய்தியிருந்ததா எனவும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட்டதா என்பதனை அனுமானிக்க முடியாதிருந்தது.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

2000 – 2005 காலப்பகுதியில் சபை நிதியத்திலிருந்து ரூபா 3,679,675 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தின் நிர்மாணம் நியமங்களுக்கு இணங்காமையால் 2005 ஆம் ஆண்டிலிருந்து நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்